12.03.2025 S.C.No.138 of 2017 P.W.10 - Mani

A1 to A6 present.

Crl.M.P.No. 836 to 838 of 2025, dated 07.03.2025 மனுக்கள் அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.35 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: 18.06.2015ம் தேதி மாலை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்து உங்கள் மகன் அருணாச்சலத்தையும், சிவா (எ) சிவசங்கரையும் நிலையத்தில் வைத்து தான் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் ?

பதில்: சரிதான்

கேள்வி: 18.06.2015 அன்று இரவு 10 மணிக்கு பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்த காவலர்களிடம் எழுதிக் கொடுத்துவிட்டு உங்கள் மகனை அழைத்து சென்றீர்கள் என்றால் ?

பதில்: ஆமாம்

கேள்வி: 18.06.2015 அன்று தாங்கள் காவல் நிலையம் வந்து மீண்டும் தங்கள் மகனை அழைத்து செல்லும்வரை ஆஜர் எதிரிகள் யாரையும் தாங்கள் நிலையத்தில் பார்க்கவில்லை என்றால் ?

பதில்: யாரும் இல்லை

கேள்வி: ஆஜர் எதிரிகள் யார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் ?

பதில்: தெரியாது

கேள்வி: ஆஜர் எதிரிகளை தாங்கள் பார்க்கவில்லை என்று சொன்னால் ?

பதில்: நான் பார்க்கவில்லை

கேள்வி: தங்களின் மகன் அருணாச்சலம் அவரை பள்ளிகொண்டா காவல் நிலைய காவலர்கள் நிலையம் அழைத்து வந்தது முதல் தாங்கள் வந்து அழைத்து செல்லும் வரை காவல் நிலையத்தில் தான் இருந்ததாக சொன்னார் என்றால் ?

பதில்: சரிதான்

கேள்வி: தங்களின் மகன் அருணாச்சலம் பள்ளிகொண்டா காவல் நிலைய காவலர்கள் பொறுப்பில் இருந்தபோது எவரையும் அடித்ததாக தங்களிடம் சொல்லவில்லை என்றால் ?

பதில்: சொல்லவில்லை

கேள்வி: 18.06.2015 அன்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு தங்களின் மகன் அருணாச்சலத்தை அழைத்து செல்லும்போது ஆஜர் எதிரிகள் எவரும் நிலையத்தில் இல்லை என்று சொன்னால் ?

பதில்: யாரும் இல்லை

கேள்வி: 18.06.2015 அன்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்துவிட்டு தங்களின் மகன் அருணாச்சலத்தை அழைத்து செல்லும்போது வேறு நபர்களும் அங்கிருந்தார்கள் அவர்களை தங்களுக்கு யார் என்று தெரியாது என்றால் ?

பதில்: தெரியாது

கேள்வி: அ.த.சா.ஆ.16 ல் உள்ள தகவல்களை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்த காவலர்களில் ஒருவர் எழுதினார் என்றால்?

பதில்: ஒரு நபர் போலிஸ் உடையில் இருந்தார். அவர் எழுதினார். அவர் பெயர் எனக்கு தெரியாது.

கேள்வி: உங்கள் மகன் அருணாச்சலத்தை காவல் நிலையத்திலிருந்து தான் அழைத்து சென்றேன் என்றால் ?

பதில்: சரிதான்

**2 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மதியம் 02.55 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.12 16:07:56 +0530